வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 116/2020

வழக்கு சாட்சி LW1 /PW1

| பெயர் | ராணி | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | ராஜமாணிக்கம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 70 |

தேதி 12.03.2025

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மாதவரம் பகுதியில் வசித்து வருகிறேன். 27.03.2016 அன்று காலை 10.30 மணியளவில் எனது மகளின் வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது, கில்பன் நகர் அருகே பிள்ளையார் கோயில் அருகே மிளகாய் பொடி தூவி எனது கழுத்தில் இருந்த 4 ¼ சவரம் மதிப்புள்ள தங்க செயினை அறுத்துக்கொண்டு சென்றுவிட்டார். மிளகாய் தூள் தூவியதால் என்னால் பார்க்க முடியவில்லை. இதுகுறித்து காவல் நிலையம் சென்றுபுகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரானது நான் அளித்ததுதான். மேற்படி புகாரானது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். நகையை நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின்தான் என்னுடையதுதான். மேற்படி புகைப்படமானது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

நான் எதிரியை பார்த்தேனா என்றால் இல்லை. மிளகாய் பொடி தூவியதால் தெரியாது. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.